# நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சத்தியமங்கலம்

முன்னிலை: திரு. P. ரஞ்சித்குமார், பி.ஏ., பி.எல்.,
நீதித்துறை நடுவர்,
சத்தியமங்கலம்.

2057 திருவள்ளுவராண்டு ஸ்ரீபராபவ வருடம் ஆனி மாதம் 08ம் நாள்
2026ம் வருடம் ஜூன் மாதம் 22 ஆம் நாள் திங்கள்கிழமை

## ஆண்டுபட்டிகை வழக்கு எண். 46/2018

## CNR. No.TNED07-000237-2018

அரசுக்காக
காவல் துறை ஆய்வாளர்,
புளியம்பட்டி காவல் நிலையம்,
குற்ற எண். 259/2017. ..... குற்றமுறையிடுபவர்

/எதிர்/

தர்மலிங்கம் (41/2026)
த/பெ. ராமசாமி
க,எண்.57, பட்டத்தரசி அம்மன் கோவில்,
வீரச்சின்னனூர்,
டி.ஜி.புதூர்,
கோபிசெட்டிபாளையம் தாலுகா,
ஈரோடு மாவட்டம். ....எதிரி

**Particulars Under Rule 106 of Criminal Rules of Practice 2019**

| | |
|---|---|
| Name of the Police Station and Cr No. | Puliyampatti Police Station, Cr.No. 259/2017 |
| Accused Name | Dharmalingam |
| Father / Husband Name | S/o.Ramasamy |
| Occupation | Police Head Constable |
| Address | D.No.57, pattatharasi amman Kovil, Veerachinnanur,D.G.Pudur, Gobichettipalayam (Tk), Erode(Dt). |

| | |
|---|---|
| Age | 41/2026 |
| Occurrence | 04.09.2017 |
| Complainant | 05.09.2017 |
| Apprehension | Nil |
| Released on Bail | Station Bail |
| Commitment | Not Applicable |
| Commencement of trial | 12.07.2023 |
| Closure of trial | 18.06.2026 |
| Sentence or order | Acqittal |
| Service of Copy of Judgment an accused | Nil |
| Explanation of delay | Delayed by both side |

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தால் கடந்த 24.07.2018ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசுக்காக அரசு உதவி குற்றத்துறை வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் ஆஜராகியும், எதிரிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.தங்கராஜன்,எம்.காம்.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும் இவ்வழக்கு சாட்சிகள், சான்றாவணங்கள், இரு தரப்பு வாதங்கள் ஆகியவற்றை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

**<u>தீர்ப்புரை</u>**

1. இவ்வழக்கானது புளியம்பட்டி காவல் நிலைய குற்ற எண்.259/2017 க்காக இ.த.ச.பிரிவுகள் 279(2 Counts), 338, 304A ன் கீழ் எதிரியின் மீது தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கையின் அடிப்படையில் இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

2. <u>அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்</u>

கடந்த 04.09.2017 ந் தேதி இரவு சுமார் 7.15 மணிக்கு புளியம்பட்டி காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட புளியம்பட்டி – சத்தி மெயின் ரோடு S.R.C பள்ளிக்கு முன்பு (NH 209) புகார்தாரர் வாசுதேவன் அவரது மனைவி குணவதியை அவருக்கு சொந்தமானTVS XL SUPER TN 36 M 0744 வண்டியில் பின்புறம் உட்கார வைத்துக் கொண்டு மாதம்பாளையம் கோயில் கும்பாபிஷேகத்திற்கு சென்று விட்டு திரும்பி சிங்கிரிபாளையம் அவரது ஊருக்கு செல்ல தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ரோட்டின் இடதுபுற ஓரமாக வந்து கொண்டிருந்த போது புகார்தாரர் வாசுதேவனுக்கு முன்னால் அதே ரோட்டில் அதே திசையில் புளியம்பட்டியைச் சேர்ந்த தங்கராசு என்பவர் அவருக்கு சொந்தமான TN 36 Y 6519 TVS Centra வண்டியில் ரோட்டின் இடதுபுற ஓரமாக சென்று S.R.C பள்ளிக்கு செல்ல வலதுபுறம் செல்ல ரோட்டில் நின்று கொண்டிருந்த போது அதே ரோட்டில் எதிர்திசையான வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த TN 36 AV 6363 ஷிப்ட் காரின் ஓட்டுனரான எதிரி சத்தியமங்கலத்தைச் சேர்ந்த தர்மலிங்கம் காரை அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ரோட்டின் வலதுபுறம் ஏறி காரை ஓட்டி வந்து ரோட்டின் ஓரத்தில் வண்டியுடன் நின்று கொண்டிருந்த தங்கராசு TVS Centra வண்டியின் மீது மோதியும் தொடர்ந்து அவருக்கு பின்னால் வந்த புகார்தாரர் TVS XL SUPER வண்டியின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதில் புகார்தாரருக்கு முன்னால் சென்ட்ரா வண்டியில் நின்று கொண்டிருந்த தங்கராசுவின் மீது மோதி தொடர்ந்து காரின் ஓட்டுனர் வாசுதேவன் மற்றும் அவரது மனைவி குணவதி ஆகிய இருவர் மீது மோதி ஏற்பட்ட விபத்தில் குணவதிக்கு சாதாரண சிராய்ப்பு காயமும் ஏறப்பட்டது என்றும், குணவதி என்பவர் மருத்துவமனை செல்லவில்லை என்றும், வாசுதேவன் என்பவர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றார் என்றும், புகார்தாரர் வாசுதேவனுக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் என்றும், மேலும் புகார்தாரருக்கு

முன்னால் சென்ட்ரா வண்டியில் சென்று நின்று கொண்டிருந்த தங்கராசுவின் மீது மோதி ரோட்டில் கீழே விழுந்து விபத்து ஏற்பட்டு விபத்தில் உடலின் முக்கிய உறுப்புகள் சேதம் அடைந்து தங்கராசுவின் இறப்பிற்கு காரணமாக இருந்துள்ளார் என்பது அரசு தரப்பு வழக்காகும்.

3. இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தால் சி.சி.எண்: 46/2018 ஆக அழைப்பாணை வழக்காக கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜரான எதிரிக்கு வழக்காவணங்களின் நகல்களை கு.வி.மு.ச பிரிவு 207 –ன் படி இலவசமாக வழங்கி ஆலோசனை செய்ய அவகாசம் கொடுக்கப்பட்டு, எதிரியின் மீது இ.த.ச. பிரிவுகள் 279(2 Counts), 338, 304–A ன் கீழ் குற்றத்தின் தன்மை குறித்து எதிரிக்கு விளக்கி வினவியபோது எதிரி பொய்வழக்கு, குற்றவாளி இல்லை என மறுத்து பதிலளித்தும், தனக்கு எதிரான குற்ற முகாந்திரங்களையும் மறுத்துரைத்ததால் எதிரி மீதான வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. இவ்வழக்கில் அரசுத் தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.12 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.17 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சான்றுப்பொருள் குறியீடு செய்யப்படவில்லை.

5. <u>அரசுத்தரப்பு சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு</u>

இவ்வழக்கின் அ.சா.1 புகார்தாரர் வாசுதேவன் என்பவரும் அவருடைய மனைவியான அ.சா.2 குணவதி என்பவரும் கடந்த 04.09.2014ம் தேதியன்று புளியம்பட்டியிலிருந்து சத்தியமங்கலத்திற்கு வந்து கொண்டிருந்த போது இரவு 07.15 மணிக்கு S.R.C பள்ளி அருகே வரும் போது சத்தியிலிருந்து வந்த கார் மோதிவிட்டது என்றும், அதில் புகார்தாரர் வாசுதேவன் என்பவருக்கு இடது கை மற்றும் காலில் அடிபட்டது என்றும், மேலும் அதே சம்பவத்தின் போது புகார்தாரருக்கு முன்பு தங்கராஜ் என்பவர் TVS Centra என்ற இருசக்கர வாகனத்தில் அவருடைய தங்கை மகளை

ஸ்பெசல் கிளாஸ் முடித்து விட்டு அழைத்து வர சென்று S.R.C பள்ளி அருகே நின்று கொண்டிருந்த போது மேற்படி கார் ஆனது தங்கராஜ் என்பவர் மீது மோதி விட்டது என்றும், விபத்தில் காயமடைந்த அ.சா.1 புகார்தாரர் வாசுதேவன் புளியம்பட்டி அருணாச்சலம் மருத்துவமனைக்கு சென்று முதலுதவி சிகிச்சை எடுத்துவிட்டு பின்பு சிகிச்சைக்காக கோபி தர்ஷன் மருத்துவமனைக்கு சென்றார் என்றும், தங்கராஜ் என்பவரை 108 ஆம்புலன்ஸ் மூலமாக சத்தியமங்கலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்ற போது வழியிலே இறந்துவிட்டார் என்றும், மேற்படி விபத்து குறித்து இறந்துபோன தங்கராஜ் என்பவருடைய மனைவி அ.சா.4 ராஜேஸ்வரி என்பவருக்கு முரளிகிருஷ்ணன் என்பவர் தகவல் கூறினார் என்றும், மேற்படி சம்பவத்தை அ.சா.3 சின்னப்பன், அ.சா.5 சீனிவாசன், அ.சா.6 முரளிகிருஷ்ணன், அ.சா.7 ரமேஷ் ஆகியோர்கள் பார்த்தார்கள். மேற்படி விபத்து குறித்து அ.சா.4 ராஜேஸ்வரி என்பவர் அவருடயை மகளான அ,சா.8 மதி என்பவருக்கு தகவல் கூறினார். இவ்வழக்கின் அ.சா.1 புகார்தாரர் வாசுதேவன் என்பவர் கோபிசெட்டிபாளையம் தர்ஷன் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது இவ்வழக்கின் அ.சா.10 புளியம்பட்டி காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் சுகுமாரன் என்பவருக்கு கிடைக்கப்பெற்ற மருத்துவமனை தகவல் குறிப்பின் அடிப்படையில் 05.09.2017ம் தேதியன்று அ.சா.1 புகார்தாரர் வாசுதேவன் என்பவரிடமிருந்து அ.சா.ஆ.1 புகார்வாக்குமூலம் பெற்றார்.

6. பின்பு நிலையம் வந்து புளியம்பட்டி காவல் நிலைய குற்றஎண்.259/2017ன் கீழ் இ.த.ச பிரிவுகள் 279, 337, 304–Aன் கீழ் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஐ பதிவு செய்தார். முதல் தகவல் அறிக்கையுடன் புகார்வாக்குமூலத்தின் அசலை இணைத்து இந்நீதிமன்றத்திற்கு அனுப்பியும் பிற நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை புலன் விசாரணைக்காக புளியம்பட்டி பொறுப்பு காவல் துறை ஆய்வாளர் அ.சா.12 சிவக்குமார் என்பவர் பார்வைக்காக வைத்தார். மேற்படி வழக்கு ஆவணங்களை பெற்றுக்கொண்ட இவ்வழக்கின் புளியம்பட்டி பொறுப்பு காவல் துறை ஆய்வாளர் அ.சா.12 சிவக்குமார் 05.09.2017ம் தேதியன்று காலை 07.15 மணிக்கு அவர்

தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் அ.சா.9 சபரி மற்றும் அ.சா.11 சுரேஷ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 ஐ தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றார். பார்வை மகஜரில் முதலாவதாக உள்ள அ.சா.9 சபரி என்பவருடைய கையெழுத்து அ.சா.ஆ.2 ஆகும். இரண்டாவதாக உள்ள அ.சா.11 சுரேஷ் என்பவருடைய கையெழுத்து அ.சா.ஆ.5 ஆகும்.

7. பின்னர் மேற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் TN 36 AV 6363 என்ற காரின் உடைந்த ஹெட்லைட் பாகங்களையும், காரின் பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் நெம்பர் பிளேட்டையும் காலை 07.45 மணிக்கு கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.8 மூலம் கைப்பற்றினார். கைப்பற்றுதல் மகஜரில் முதலாவதாக உள்ள அ.சா.9 சபரி என்பவருடைய கையெழுத்து அ.சா.ஆ.3 ஆகும். இரண்டாவதாக உள்ள அ.சா.11 சுரேஷ் என்பவருடைய கையெழுத்து அ.சா.ஆ.6 ஆகும். பின்னர் இந்த வழக்கில் இறந்துபோன தங்கராஜ் என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.9 ஐ தயார் செய்ததாகவும், இறந்துபோன தங்கராஜ் என்பவரின் இறப்பிற்கான காரணம் அறியும்பொருட்டு வேண்டுகோள் கடிதத்துடன் பிரேதத்தை சிறப்பு உதவி ஆய்வாளர் சுகுமாரன் மூலமாக  என்பவர் மூலமாக சத்தி அரசு மருத்துவமனை மருத்துவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. பின்னர் சாட்சிகள் வாசுதேவன், குணவதி, ராஜேஷ்வரி, மதி, சரவணக்குமார், நடராஜன், செல்வி, சுப்பிரமணியன், சீனிவாசன், முரளிகிருஷ்ணன், ரமேஷ், சின்னப்பன், சபரி மற்றும் சுரேஷ் ஆகியோர்களைத் தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

8. 05.09.2017–ம் தேதி மாலை 05.30 மணிக்கு எதிரி TN36 AV 6363 என்ற காரின் ஓட்டுநர் தர்மலிங்கம் என்பவரை புளியம்பட்டி காவல் நிலையத்தில் வைத்து கைது செய்து தக்கப் பிணையில் விடுவித்தார். 09.09.2017–ம் தேதி இந்த வழக்கில்

சம்மந்தப்பட்ட வாகனங்கள் TVS XL SUPER TN 36 M 0744, TVS CENTRA MOTOR CYCLE TN 36 Y 6519 மற்றும் விபத்து ஏற்படுத்திய கார் TN 36 AV 6363 ஆகியவற்றை மோட்டார் வாகன ஆய்வாளருக்கு அனுப்பி வைத்தார் என்றும், பின்னர் 12.09.2017–ம் தேதி இந்த வழக்கில் இறந்துபோன தங்கராஜ் என்பவருக்கு முதலுதவி அளித்த மருத்துவர் கலைவாணி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.ஆ.10 விபத்துப் பதிவேட்டினைப் பெற்றார்.

9. பின்னர் இறந்துபோன தங்கராஜ் என்பவரின் பிரேதத்தின் மீது உடற்கூறாய்வு மேற்கொண்ட சத்தி அரசு மருத்துவமனை உதவி மருத்துவர் ரம்யா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.11 ஐ பெற்றார். பின்னர் 20.09.2017–ம் தேதி இவ்வழக்கில் வாகனங்களை தணிக்கை செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் பாமாபிரியா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து TN 36 M 0744 TVS XL என்ற இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.12, TN 36 Y 6519 என்ற TVS CENTRA என்ற இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.13, விபத்து ஏற்படுத்திய TN 36 AV 6363 என்ற நான்கு சக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.14 ஆகியவற்றை பெற்றார்.

10. பின்னர் காயம்பட்ட வாசுதேவன் என்பவருக்கு சிகிச்சையளித்த கோபி தர்சன் மருத்துவமனை மருத்துவர் சுந்தரராஜன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.ஆ.15 காயச்சான்றிதழ் பெற்றார். மேற்படி வாசுதேவன் என்பவருக்கு ஏற்பட்ட 1 முதல் 3 காயங்கள் கொடுங்காயங்கள் என்று மருத்துவர் கருத்துத் தெரிவித்திருந்ததால் இந்த வழக்கின் சட்டப்பிரிவுகளான 279, 337, 304–A லிருந்து 279, 338, 304–A இ.த.சவாக மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.16 ஐ தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார் என்றும், பின்னர் கைப்பற்றிய சொத்துக்கு அ.சா.ஆ.17 படிவம் 91 தயார் செய்து பி.ஆர். எண். 33/2018 பெற்றார். பின்னர் இவ்வழக்கின் புலன்விசாரணை முடித்து இவ்வழக்கின் எதிரியின்

மீது இ.த.ச. பிரிவுகள் 279, 338, 304–A–ன் கீழ் குற்ற இறுதி அறிக்கைத் தாக்கல் செய்தார் என்பது அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் ஆகும்.

11. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமான அம்சங்கள் குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(பி)ன் கீழ் வினவியபோது எதிரி அதனை மறுத்து கூறி பொய்சாட்சி என்று கூறி தன்னுடைய தரப்பில் சாட்சிகள் இல்லை என தெரிவிக்கப்பட்ட நிலையில் பின்பு எதிரி தரப்பில் சாட்சிகளோ சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை.

12. அரசு தரப்பில் வாதிட்ட கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் இந்த வழக்கில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்ப்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், அரசு தரப்பு சாட்சிகள் அதற்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளனர் என்றும், எனவே எதிரிக்கு உரிய தண்டனை வழங்க வேண்டுமென வாதிட்டார். மாறாக, எதிரி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் அரசு தரப்பு சாட்சிகள் எதிரிக்கு எதிராக எவ்வித சாட்சியமும் அளிக்காத நிலையில் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை இந்த குற்றச்சாட்டுகளில் இருந்து விடுதலை செய்ய வேண்டுமென வாதிட்டார்.

13. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம் என்னவென்றால் அரசு தரப்பில் எதிரியின் மீதான இ.த.ச.பிரிவுகள் 279(2 Counts), 338, 304–A ன் கீழான குற்றச்சாட்டுகளை எவ்வித ஐய்யப்பட்டிற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

<u>14.தீர்வு</u>

இவ்வழக்கின் எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள இ.த.ச பிரிவுகள் 279(2 Counts), 338, 304–A ன் கீழான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் எவ்விதமான ஐய்யப்பாட்டிற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்கையில் இவ்வழக்கின் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச பிரிவு279(2 Counts), 338, 304–A ன் கீழான குற்றச்சாட்டுக்களை அரசுதரப்பில் நிரூபணம்

செய்யவேண்டுமெனில் இவ்வழக்கில் கூறியுள்ள விபத்தானது இவ்வழக்கின் எதிரியின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்பதை இவ்வழக்கின் அரசு தரப்பில் நிரூபணம் செய்யவேண்டும். அவ்வாறு அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்கையில் இவ்வழக்கின் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட இவ்வழக்கு விபத்தில் இறந்துபோன தங்கராஜ் என்பவருடைய மனைவியான அ.சா.4 ராஜேஷ்வரி, அவருடைய மகளான அ.சா.8 மதி ஆகியோர்கள் இவ்வழக்கு விபத்தை நேரில் பார்க்காத இவ்வழக்கு விபத்தை கேள்விப்பட்டு பின்னர் தங்கராஜ் என்பவரை மருத்துவமனை சென்று பார்த்த நபர்கள் ஆவார்கள். ஆகவே அவர்களுடைய சாட்சியங்களை வைத்து இவ்வழக்கு விபத்தானது இவ்வழக்கின் எதிரி தர்மலிங்கம் என்பவருடைய கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் ஏற்பட்டதாக உறுதிசெய்ய இயலாது.

15. இவ்வழக்கு விபத்தில் காயம்பட்ட TN 36 M 0744 என்ற TVS XL SUPER வண்டியில் சென்ற நபர்களான அ.சா.1 வாசுதேவன் என்பவர் தன்னுடைய முதல்நிலை சாட்சியத்தில்

> **1. நான் தற்போது சிங்கிரிபாளையளத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். 04.09.2017ம் தேதியன்று புளியம்பட்டியிலிருந்து சத்திக்கு எக்சல் சூப்பர் வண்டியில் நானும் என் மனைவியும் வந்து கொண்டிருந்தோம் அப்போது இரவு 7.15 மணி இருக்கும். SRCபள்ளிக்கு அருகே வரும் போது சத்தியிலிருந்து வந்த கார் என் வண்டியின் மீது மோதி விட்டது. எனக்கு இடது கையில் அடிப்பட்டது. காலில் சிறிய அடிப்பட்டது. முதல் சிகிச்சைக்கு புளியம்பட்டி அருணாச்சலம் மருத்துவமனைக்கு சென்று விட்டு கோபி தர்சன் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது போலிசார் வந்து என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றுக்கொண்டார்கள். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1. விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை யார் ஓட்டி வந்தார் என்றும், அவரது பெயர், அடையாளம் எனக்கு தெரியாது.** என்று

சாட்சியம் அளித்துள்ளார்.

16. மேலும் காயம்பட்ட மற்றொரு சாட்சியான அ.சா.1 வாசுதேவன் என்பவருடைய TVS XL SUPER வண்டியில் சென்ற அவருடைய மனைவியான அ.சா.2 குணவதி என்பவர் தன்னுடைய முதல்நிலை சாட்சியத்தில்

> **2017ம் ஆண்டு மாதம்பாளையம் கோவிலுக்கு சென்று விட்டு நானும் எனது கணவரும் TVS EXCEL வண்டியில் வந்து கொண்டிருந்தத போது இரவு 7.15 மணிக்கு SRC பள்ளி அருகே வரும் போது எங்களுக்கு எதிரே வந்த கார் ஒன்று மற்றொரு நபரை அடித்துவிட்டு, எங்களையும் அடித்துவிட்டு சென்று விட்டது. அதில் என் கணவருக்கு கை, கால் ஆகிய இடங்களில் அடிப்பட்டது. எனக்கு தலையில் லேசான காயம் ஏற்பட்டது. பின் புளியம்பட்டியில் உள்ள அருணாச்சலம் மருத்துவனைக்கு சென்று விட்டு பின் கோபி தர்சன் மருத்துவனைக்கு மேல் சிகிச்சைக்கு சென்றேன். விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டி வந்தவரின் பெயர் அடையாளம் எனக்கு தெரியாது.** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

17. ஆகவே இவ்வழக்கின் அ.சா.1, அ.சா.2 ஆகியோர்கள் தங்களது முதல்நிலை சாட்சியத்தில் தங்கள் மீது மோதிய நான்கு சக்கர வாகனத்தின் பதிவு எண் மற்றும் மேற்படி வண்டியை இவ்வழக்கின் எதிரி தர்மலிங்கம் என்பவர் தான் ஓட்டி வந்தார் என்பது குறித்து எவ்விதமான சாட்சியமும் அளிக்கவில்லை. மேலும் இவ்வழக்கின் எதிரி காரை ஓட்டி வந்த விதம் குறித்தும் சாட்சியம் அளிக்கவில்லை. ஆகவே அவ்வாறு சாட்சியம் அளிக்காத நிலையில் அ.சா.1, அ.சா.2 ஆகியோர்களின் சாட்சியங்களின் மூலம் இவ்வழக்கு விபத்தானது இவ்வழக்கின் எதிரியின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் ஏற்பட்டதாக உறுதிசெய்ய இயலாது.

18. மேலும் இவ்வழக்கின் அரசு தரப்பில் இவ்வழக்கு விபத்தை நேரில் பார்த்ததாக விசாரிக்கப்பட்ட அ.சா.3 சின்னப்பன் என்பவர் தன்னுடைய முதல்நிலை சாட்சியத்தில்

> **நான் தற்போது புளியம்பட்டி காந்தி நகரில் வசித்து SRC பள்ளியில்**

**Securityயாக வேலை செய்து வருகிறேன். 04.09.2017ம் தேதியன்று அன்று இரவு 07.30 மணிக்கு சிறப்பு வகுப்பு இருந்ததால் நான் பள்ளியின் முன் கேட்டிற்கு வெளியே நின்று கொண்டிருந்தேன். சத்தியிலிருந்து ஒரு கார் வந்தது. பள்ளியில் படிக்கும் குழந்தையை அழைத்து செல்வதற்காக பெற்றோர் ஒருவர் வந்திருந்தார். அவர் பெயர் தங்கராஜ் என்று சொன்னார்கள். கார் வந்த வேகத்தில் பைக்கில் மோதியதில் அவர் கீழே விழுந்து விட்டார். கார் நிற்காமல் சென்று விட்டது. அருகில் இருந்தவர்கள் சென்று பார்த்தார்கள். நான் குழந்தைகளை ஓரமாக நிற்க வைத்தேன். அடிப்பட்டவரை சிகிச்சைகாக மருத்துவனைக்கு அழைத்து சென்றார்கள். கார் நிற்காமல் சென்று விட்டதால் காரை யார் ஓட்டி வந்தார் என்று எனக்கு தெரியவில்லை.** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

19. ஆகவே இவ்வழக்கின் அ.சா.3 சின்னப்பன் என்பவர் தன்னுடைய முதல்நிலை சாட்சியத்தில் இவ்வழக்கு விபத்தில் இவ்வழக்கின் அ.சா.1 வாசுதேவன் மற்றும் அ.சா.2 குணவதி ஆகியோர்கள் வந்த TVS XL SUPER வண்டியில் இவ்வழக்கின் விபத்து ஏற்படுத்திய நான்கு சக்கர வாகனமானது மோதியதாக எவ்விதமான சாட்சியமும் அளிக்கவில்லை. மேற்படி நான்கு சக்கர வாகனமானது தங்கராஜ் என்பவர் மீது மட்டும் மோதியதாக சாட்சியம் அளித்துள்ளார். ஆகவே இவ்வழக்கின் அ.சா.3 சின்னப்பன் என்பவர் அன்றைய தினம் இவ்வழக்கு விபத்தை பார்த்தாரா என்பது குறித்து இந்நீதிமன்றத்திற்கு சந்தேகம் எழுகிறது. மேலும் இவ்வழக்கின் அ.சா.3 விபத்து ஏற்படுத்திய காரின் பதிவு எண் மற்றும் அதை ஓட்டிய வந்த நபர் குறித்து எவ்விதமான சாட்சியமும் அளிக்கவில்லை. ஆகவே அ.சா.3 சின்னப்பன் என்பவரின் சாட்சியத்தை வைத்து இவ்வழக்கு விபத்தானது இவ்வழக்கின் எதிரியின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் ஏற்பட்டதாக உறுதிசெய்ய இயலாது.

20. மேலும் இவ்வழக்கின் அரசு தரப்பில் அ.சா.5 ஆக விசாரிக்கப்பட்ட சீனிவாசன் என்பவர் தன்னுடைய முதல்நிலை சாட்சியத்தில்

**2017ம் ஆண்டு இரவு 07.15 மணிக்கு புளியம்பட்டியிலுள்ள SRC பள்ளியில் 12**

**படித்துக்கொண்டிருந்த எனது மகளை கூப்பிடுவதற்காக சென்றிருந்தேன். அப்போது நானும், முரளிகிருஷ்ணா, ரமேஷ் ஆகியோர் ஸ்கூல் கேட்டிற்கு அருகில் ரோட்டின் ஓரத்தில் நின்றுபேசிக்கொண்டிருந்தோம். சத்தியிலிருந்து கோவை செல்வதற்காக கார் ஒன்று வந்தது. தங்கராஜ் என்பவர் ரோட்டின் வலதுபுறமாக அதாவது பள்ளிக்கு எதிர்புறமாக பைக்கில் நின்றுகொண்டிருந்தார். வேகமாக வந்த கார் தங்கராஜ் மீது மோதியதில் தங்கராஜ் மேலே தூக்கி வீசப்பட்டு கீழே விழுந்தார்.**

**2. நானும், முரளிகிருஷ்ணனும் ஆம்புலன்ஸிக்குப் போன் செய்தோம். ஆம்புலன்ஸ் வந்தது. தங்கராஜின் மனைவிக்கு முரளிகிருஷ்ணன் என்பவர் தகவல் சொல்லி அவர் சம்பவ இடத்திற்கு வந்தார். ஆம்புலன்ஸில் தங்கராஜை அவரது மனைவி சிகிச்சைக்காக புளியம்பட்டி அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கிருந்து சத்தி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். காரை ஓட்டிவந்த நபர் காரை நிறுத்தாமல் சென்றுவிட்டார். அது சிப்ட் கார் எண்.6363 ஆகும். பின் அவர் காலையில் அரசு மருத்துமனையில் இறந்துவிட்டதாக எனக்கு தகவல் கிடைத்தது. கார் நிற்காமல் சென்றுவிட்டதால் அதை ஓட்டி சென்ற நபரை நான் பார்க்கவில்லை.** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

21. மேலும் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட மற்றொரு கண்ணுற்ற சாட்சியான அ.சா.7 ரமேஷ் என்பவர் தன்னுடைய முதல்நிலை சாட்சியத்தில்

**04.09.2017-ம் தேதியன்று மாலை 07.15 மணி சுமாருக்கு SRC பள்ளியில் 11ம் வகுப்பு படிக்கும் எனது மகளை பள்ளியிலிருந்து பள்ளியின் கேட்டிற்கு முன்பு அழைத்து வந்துகொண்டிருந்தேன். அப்போது டமாரென்று கேட்டிற்கு வெளியே சத்தம் கேட்டது. நான் சென்று பார்த்தேன். தங்கராஜ் கீழே கிடந்தார். தங்கராஜ் TVS XL 6519 வண்டியில் அவரது தங்கை மகளை அழைத்துச் செல்வதற்கு வந்திருந்தார். சத்தியிலிருந்து புளியம்பட்டி நோக்கி வந்த சிப்ட் கார் தங்கராஜை அடித்துவிட்டு நிற்காமல் சென்றது. அங்கு நானும், முரளிகிருஷ்ணனும், சீனிவாசன் அங்கு இருந்தோம். நானும், சீனிவாசனும் என்னுடைய குழந்தைகளைப் பள்ளியிலிருந்து அழைத்து வந்தோம். முரளிகிருஷ்ணன் அவரது தோட்டத்திலிருந்து வந்தார். வேறு யாருக்கும் ஒன்றும் ஆகவில்லை.**

**2. ஆம்புலன்ஸ் வந்து தங்கராஜை சத்தி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கிருந்து தங்கராஜ் இறந்துவிட்டதாக போன் மூலம் தகவல் வந்தது. விபத்து ஏற்படுத்திய கார் நிற்காமல் சென்றதால் அதை யார் ஓட்டி வந்தார்கள் என்று நான் பார்க்கவில்லை. சிப்ட் காரின் எண் 6363.** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

22. ஆகவே இவ்வழக்கு விபத்தை நேரில் பார்த்ததாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.5 சீனிவாசன், அ.சா.7 ரமேஷ் ஆகியோர்கள் இவ்வழக்கு விபத்து ஏற்படுத்திய கார் ஆனது இவ்வழக்கின் அ.சா.1 வாசுதேவன், அ.சா.2 குணவதி ஆகியோர்கள் வந்த TVS XL SUPER வண்டியின் மீது மோதியதாக எவ்விதமான சாட்சியமும் அளிக்கவில்லை. தங்கராஜ் என்பவர் மீது மட்டும் மேற்படி கார் ஆனது மோதியதாக சாட்சியம் அளித்துள்ளார்கள். மேலும் அ.சா.5 சீனிவாசன், அ.சா.7 ரமேஷ் ஆகியோர்கள் விபத்து ஏற்படுத்தியதாக கூறும் காரினுடைய முழு எண் குறித்து இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் இவ்வழக்கின் எதிரி தான் மேற்படி விபத்து ஏற்படுத்திய காரை ஓட்டி வந்ததாக எவ்விதமான சாட்சியமும் அளிக்கவில்லை. ஆகவே இவ்வழக்கின் அ.சா.5 சீனிவாசன், அ.சா.7 ரமேஷ் ஆகியோர்களின் சாட்சியங்களின் மூலம் இவ்வழக்கு விபத்தானது இவ்வழக்கின் எதிரியின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் ஏற்பட்டதாக உறுதி செய்ய இயலாது.

23. மேலும் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட மற்றொரு கண்ணுற்ற சாட்சியான அ.சா.6 முரளிகிருஷ்ணன் என்பவர் தன்னுடைய முதல்நிலை சாட்சியத்தில்

> **04.09.2017–ம் தேதியன்று எனது தோட்டத்தில் களையெடுத்தவர்களுக்கு சம்பளம் கொடுத்துவிட்டு மாலை 07.15 மணிக்கு புளியம்பட்டி S.R.C பள்ளி அருகே வரும்போது என் நண்பர்கள்கள் சீனிவாசன், ரமேஷ் ஆகியோர்களின் குழந்தைகளை அழைத்துச் செல்வதற்காக பள்ளிக்கு முன்பாக நின்றுகொண்டிருந்தார்கள். அவர்களிடம் நான் பேசிக்கொண்டிருந்தேன். தங்கராஜ் அவரது அக்காவின் குழந்தையையோ அல்லது தங்கையின் குழந்தையையோ பள்ளியிலிருந்து அழைத்துச் செல்வதற்காக புளியம்பட்டி – சத்தி போர தெற்கிலிருந்து வடக்கு நோக்கி உள்ள ரோட்டின் இடதுபுறத்தில் பள்ளிக்கு முன்பாக TVS 50 வாகனத்தில் நின்றுகொண்டிருந்தார்.**
>
> **2. சத்தி – புளியம்பட்டி நோக்கி வந்த சிப்ட் கார் ஒன்று தங்கராஜின் மீது மோதி அதில் தங்கராஜ் மேலே தூக்கி வீசப்பட்டு கீழே விழுந்தார் அதற்குப் பின்னால் இருந்த ஒரு TVS 50 வண்டியிலும் மோதியது. அந்த TVS 50யில் ஒரு கணவன், மனைவி இருந்தார்கள். மேற்படி இரண்டு வண்டிகளிலும் மோதிவிட்டு கார் நிற்காமல் சென்றுவிட்டது. நாங்கள் நின்றுகொண்டிருந்த இடத்திலிருந்து 40 அடி தூரத்தில் விபத்து நடந்தது. தங்கராஜ் வேலை செய்து**

**வந்த அவரது ஓனர் நடராஜிக்கும், தங்கராஜின் மனைவிக்கும் தகவல் சொன்னேன். பிறகு ஆம்புலன்ஸிக்கு தகவல் சொல்லி பிறகு ஆம்புலன்ஸிக்கு தகவல் சொல்லி ஆம்புலன்ஸ் வந்தது. தங்கராஜை சத்தியமங்கலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். இன்னொரு வண்டியில் அடிபட்ட கணவன், மனைவியை புளியம்பட்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். பிறகு தங்கராஜ் இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள். காரின் நெம்பரை 6363 என்று போலீஸ் ஸ்டேசன் போன் பின்பு கேள்விப்பட்டேன். கார் நிற்காமல் சென்விட்டதால் அதனை ஓட்டிய நபரை நான் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

24. ஆகவே இவ்வழக்கின் அ.சா.6 முரளிகிருஷ்ணன் என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் இவ்வழக்கு விபத்தை ஏற்படுத்தியதாக கூறும் காரின் எண் குறித்து சாட்சியம் அளிக்கவில்லை. அவர் விபத்து ஏற்படுத்திய வண்டியின் எண் ஆனது 6363 என்று காவல் நிலையத்தின் மூலம் தெரிந்து கொண்டதாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் இவ்வழக்கின் அ.சா.6 முரளிகிருஷ்ணன் என்பவர் மேற்படி விபத்து ஏற்படுத்தியதாக கூறும் காரை இவ்வழக்கின் எதிரி தான் ஓட்டி வந்தார் என்று எவ்விதமான சாட்சியமும் அளிக்கவில்லை. அ.சா.7 முரளிகிருஷ்ணன் என்பவருடைய சாட்சியத்தை வைத்து இவ்வழக்கு விபத்தானது இவ்வழக்கின் எதிரியின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் ஏற்பட்டதாக உறுதிசெய்ய இயலாது.

25. ஆகவே இவ்வழக்கு விபத்தை நேரில் பார்த்ததாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அசா.5 சீனிவாசன், அ.சா.6 முரளிகிருஷ்ணன், அ.சா.7 ரமேஷ் ஆகியோர்கள் இவ்வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்ததாக விசாரிக்கப்பட்டாலும் அதில் அ,சா.5 சீனிவாசன், அ.சா.7 ரமேஷ் ஆகியோர்கள் தங்களுடைய சாட்சியங்களில் இவ்வழக்கு விபத்தின் போது இவ்வழக்கின் அ.சா.1 வாசுதேவன், அ.சா.2 குணவதி ஆகியோர்கள் வந்த இருசக்கர வாகனத்தில் விபத்து ஏற்படுத்திய கார் ஆனது மோதியதாக எவ்விதமான சாட்சியமும் அளிக்கவில்லை. விபத்து நடந்த இடத்திற்கு அருகில் நின்று கொண்டிருந்த அ,சா.5 சீனிவாசன், அ.சா.6 முரளிகிருஷ்ணன், அ.சா.7 ரமேஷ் ஆகியோர்களில் விபத்து ஏற்படுத்திய கார் ஆனது அ.சா.1, அ.சா.2 ஆகியோர்கள் மீது கார்

மோதியதாக சாட்சியம் அளிக்காத நிலையில் அன்றைய தினம் அவர்கள் விபத்தின் போது அங்கு நின்று கொண்டிருந்தார்களா என்பது குறித்து இந்நீதிமன்றத்திற்கு சந்தேகம் எழுகிறது.

26. மேலும் இவ்வழக்கின் எதிரி தர்மலிங்கம் என்பவரை அரசு தரப்பு சாட்சிகள் எவரும் நேரில் பார்க்காத நிலையில் மற்றும் இவ்வழக்கின் எதிரியின் TN 36 AV6363 என்ற பதிவு எண் கொண்ட கார் தான் இவ்வழக்கு விபத்தை ஏற்படுத்தியது என்றும், மேற்படி காரை இவ்வழக்கின் எதிரி தர்மலிங்கம் என்பவர் ஓட்டி வந்தார் என்பதற்காக அரசு தரப்பில் மேற்படி TN 36 AV 6363 என்ற பதிவு எண் கொண்ட காரின் நம்பர் பிளேட் மற்றும் கண்ணாடி, வலது புற சைடு மிரர் ஆகியவற்றை சம்பவ இடத்திலிருந்து இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி சிவக்குமார் என்பவர் கைப்பற்றியதாக மேற்படி கைப்பற்றுதல் மகஜரை இவ்வழக்கின் அரசு தரப்பில் அ.சா.ஆ.8 ஆகவும், படிவம் 91 ஐ அ.சா.ஆ.17 ஆகவும் இவ்வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

27. மேற்படி TN 36 AV 6363 என்ற பதிவு எண் கொண்ட காரின் நம்பர் பிளேட் மற்றும் கண்ணாடி, வலது புற சைடு மிரர் ஆகியவற்றை புலன்விசாரணை அதிகாரி அ.சா.12 சிவக்குமார் என்பவர் கைப்பற்றும்போது சாட்சிகளாக கையெழுத்து செய்த அ.சா.9 சபரி, அ.சா.11 சுரேஷ் ஆகியோர்கள் இவ்வழக்கில் பிறழ்சாட்சிகளாக மாறியுள்ளார்கள். மேலும் மேற்படி கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றப்பட்ட பொருட்களை இவ்வழக்கில் சான்றுப்பொருட்களாக குறியீடு செய்ய எவ்விதமான நடவடிக்கையும் இவ்வழக்கில் முன்னெடுக்கவில்லை. ஆகவே இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி மேற்படி விபத்து ஏற்படுத்தியதாக கூறும் TN 36 AV 6363 என்ற பதிவு எண் கொண்ட காரின் நம்பர் பிளேட் மற்றும் கண்ணாடி, வலது புற சைடு மிரர் ஆகியவற்றை சம்பவ இடத்திலிருந்து கைப்பற்றியதாக கூறுவது ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இல்லை. மேலும் இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி அ.சா.12 சிவக்குமார் என்பவர் தன்னுடைய குறுக்கு விசாரணையின் 3வது பத்தியில்

**கைப்பற்றுதல் மகஜரில் குறிப்பிட்டுள்ள காரின் உடைந்த பாகங்கள்**

**விபத்துக்குள்ளான வாகனத்துகுரியது என்று நான் கருத்துரை எதும் பெறவில்லை என்றால் சரிதான். அதேபோல் உடைந்த பாகங்களை வாகனத்துடன் பொருத்தி பார்த்தேனா என்றால் இல்லை. மோட்டார் வாகன ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜரில் குறிப்பிட்டுள்ள உடைந்து போன பாகங்கள் விபத்து ஏற்பட்ட காருக்குரியது என்று எவ்விதமான விபரங்கள் கூறவில்லை என்றால் சரிதான்.**என்று சாட்சியம் அளித்துள்ளார்.

28. மேலும் குறுக்கு விசாரணையின் 5வது பத்தியில்

**5. படிவம் 91 ல் வலதுபுற சைட் மிரர் என்ற வாசகமும் உடைந்த நிலையில் கண்ணாடி மற்றும் பிளாஸ்டிக் பாகங்கள் மற்றும் காரின் நம்பர் பிளேட் பகுதிகள் உடைந்த என்று ஒயிட்னர் போட்டு திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். பார்வை மகஜரில் காரின் வலது புற சைட் மிரர் என்று ஒயிட்னரால் திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் காரின் பிளாஸ்டிக் பாகங்கள் என்ற வாசங்கள் திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே வாசகம் கைப்பற்றுதல் மகஜரிலும் திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான்.** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

ஆகவே இவ்வழக்கில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட இவ்வழக்கு விபத்தில் பாதிக்கப்பட்ட சாட்சிகளான அ.சா.1 வாசுதேவன், அ.சா.2 குணவதி இவ்வழக்கு விபத்தை நேரில் பார்த்த சாட்சிகளான அ.சா.5 சீனிவாசன், அ.சா.6 முரளிகிருஷ்ணன், அ.சா.7 ரமேஷ் ஆகியோர்கள் இவ்வழக்கு விபத்தை ஏற்படுத்திய காரின் எண் குறித்து தெளிவாக சாட்சியம் அளிக்காத நிலையில் மேலும் அவர்கள் அனைவரும் இவ்வழக்கு விபத்தை ஏற்படுத்திய காரை ஓட்டி வந்தது இவ்வழக்கின் எதிரி தர்மலிங்கம் என்பவர் தான் என்பதை நிரூபணம் செய்ய சம்பவ இடத்திலிருந்து மேற்படி TN 36 AV 6363 என்ற பதிவு எண் கொண்ட காரின் நம்பர் பிளேட் மற்றும் கண்ணாடி, வலது புற சைடு மிரர் ஆகியவற்றிலிருந்து கைப்பற்றியதாக இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி அ.சா.12 சிவக்குமார் என்பவர் கூறியுள்ள நிலையில் மேற்படி கைப்பற்றிய பொருட்களை இவ்வழக்கில் சான்றுபொருட்களாக இவ்வழக்கில் குறியீடு செய்ய எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேலும் மேற்படி கைப்பற்றுதல் மகஜர் மற்றும் படிவம் 91 ல் திருத்தங்கள் உள்ளதை புலன்விசாரணை அதிகாரி ஒப்புக்கொண்டுள்ளதால்

உண்மையில் இவ்வழக்கு சம்பவ இடத்திலிருந்து TN 36 AV 6363 என்ற பதிவு எண் கொண்ட காரின் நம்பர் பிளேட் மற்றும் கண்ணாடி, வலது புற சைடு மிரர் ஆகியவற்றை கைப்பற்றியதாக கூறுவது ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இல்லை.

29. ஆகவே இவ்வழக்கின் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் மூலம் இவ்வழக்கின் எதிரி தான் விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டி வந்தார் என்பது குறித்து உறுதியாக சாட்சியம் அளிக்காத நிலையில் மேலும் விபத்து ஏற்படுத்திய காரின் எண் குறித்து அரசு தரப்பு சாட்சிகள் தெளிவாக சாட்சியம் அளிக்காத நிலையில் இவ்வழக்கு விபத்தானது இவ்வழக்கின் எதிரி தர்மலிங்கம் என்பவரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் ஏற்பட்டதாக முடிவு செய்ய இயலாது. ஆகவே இவ்வழக்கின் அரசு தரப்பில் இவ்வழக்கு விபத்தானது இவ்வழக்கின் எதிரியின் கவனக்குறைவு மற்றம் அஜாக்கிரதையால் ஏற்பட்டதை தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் மூலம் எவ்விதம ஐயப்பாட்டிற்கும் இடமின்றி நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

30. ஆகவே, இவ்வழக்கின் எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் எவ்விதமான ஐயப்பட்டிற்கும் இடமின்றி நிரூபணம் செய்யாத காரணத்தினால் இவ்வழக்கின் எதிரியை விடுதலை செய்வது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

31. முடிவாக, இவ்வழக்கின் எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள இ.த.ச. பிரிவுகள் 279(2 Counts), 338, 304-A ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் எவ்வித ஐயப்பட்டிற்கும் இடமின்றி நிரூபணம் செய்யாத காரணத்தினால் இவ்வழக்கின் எதிரியை குற்றவாளி அல்ல என முடிவு செய்து இவ்வழக்கின் எதிரியை கு.வி.மு.ச. 255(1) பிரிவின் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

32. இவ்வழக்கிற்காக எதிரியால் இயற்றி கொடுக்கப்பட்ட பிணைமுறி பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு மேல்முறையீடு இல்லையெனில் தானாகவே ரத்து

ஆகிவிடும்.

33. இவ்வழக்கில் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 1). TN 36 AV 6363 காரின் வலது புற சைடு மிரர் உடைந்த நிலையில் 2). TN 36 AV 6363 காரின் உடைந்த நிலையில் கண்ணாடி மற்றும் பிளாஸ்டிக் பாகங்கள் மற்றும் காரின் நம்பர் பிளேட் உடைந்த நிலையில் பி.ஆர்.எண். 33/2018 ன் கீழ் இந்நீதிமன்ற பாதுகாவலில் இருந்து வருகிறது. மேற்படி பொருள்கள் உதவாத பொருட்கள் என்பதால் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு மேல்முறையீடு இல்லையெனில் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு 2026ம் ஆண்டு ஜூன் மாதம் 22 ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RANJITHKUMAR Digitally signed by RANJITHKUMAR Date: 2026.06.22 17:57:47 +0530

நீதித்துறை நடுவர்,
சத்தியமங்கலம்

<u>அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u>

| | | |
|---|---|---|
| அ.சா.1 | 12.07.2023 | திரு. வாசுதேவன் (புகார்தாரர்) |
| அ.சா.2. | 12.07.2023 | திருமதி. குணவதி |
| அ.சா.3. | 12.07.2023 | திரு. சின்னப்பன் |
| அ.சா.4. | 30.05.2024 | திருமதி. ராஜேஸ்வரி |
| அ.சா.5. | 30.05.2024 | திரு. சீனிவாசன் |
| அ.சா.6 | 30.05.2024 | திரு. முரளிகிருஷ்ணன் |
| அ.சா.7 | 30.05.2024 | திரு. ரமேஷ் |
| அ.சா.8 | 14.10.2024 | திருமதி. மதி |
| அ.சா.9 | 14.10.2024 | திரு. சபரி |
| அ.சா.10 | 14.10.2024 | திரு, சுகுமாரன் (காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர்) |

| | | |
|---|---|---|
| அ.சா.11 | 16.10.2024 | திரு. சுரேஷ் |
| அ.சா.12 | 27.01.2025<br>18.06.2026 | திரு. சிவக்குமார் |

**<u>அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1/அ.சா.1 | 05.09.2017 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.2/அ.சா.9 | 05.09.2017 | பார்வை மகஜர் ஆவணத்தில் முதலாவதாக உள்ள அ.சா.9 சபரி என்பவரின் கையெழுத்து |
| அ.சா.ஆ.3/அ.சா.9 | 05.09.2017 | கைப்பற்றுதல் மகஜர் ஆவணத்தில் முதலாவதாக உள்ள அ.சா.9 சபரி என்பவரின் கையெழுத்து |
| அ.சா.ஆ.4/அ.சா.10 | 05.09.2017 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5/அ.சா.11 | 05.09.2017 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.6/அ.சா.11 | 05.09.2017 | கைப்பற்றுதல் மகஜர் ஆவணத்தில் இரண்டாவதாக உள்ள அ.சா.11 சுரேஷ் என்பவரின் கையெழுத்து |
| அ.சா.ஆ.7/அ.சா.12 | 05.09.2017 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.8/அ.சா.12 | 05.09.2017 | கைப்பற்றுதல் மகஜர் |
| அ.சா.ஆ.9/அ.சா.12 | 05.09.2017 | தங்கராஜ் என்பவரின் பிரேத விசாரணை அறிக்கை |
| அ.சா.ஆ.10/அ.சா.12 | 04.09.2017 | தங்கராஜ் என்பவரின் விபத்துப்பதிவேடு |
| அ.சா.ஆ.11/அ.சா.12 | 05.09.2017 | தங்கராஜ் என்பவரின் பிரேத பரிசோதனை அறிக்கை |
| அ.சா.ஆ.12/அ.சா.12 | 09.09.2017 | TVS XL SUPER TN 36 M 0744 என்ற இரு சக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| அ.சா.ஆ.13/அ.சா.12 | 09.09.2017 | TVS CENTRA MOTOR CYCLE TN 36 Y 6519 என்ற இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| அ.சா.ஆ.14/அ.சா.12 | 09.09.2017 | TN 36 AV 6363 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| அ.சா.ஆ.15/அ.சா.12 | 19.09.2017 | புகார்தாரர் வாசுதேவன் என்பவரின் காயச்சான்றிதழ் |
| அ.சா.ஆ.16/அ.சா.12 | 05.09.2017 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.17/அ.சா.12 | 05.09.2017 | படிவம் 91 |

**அரசு தரப்பு சான்று பொருட்கள்:–** இல்லை

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்:–** இல்லை

**எதிரி தரப்பு சான்று பொருட்கள் :–** இல்லை

RANJITHKUMAR Digitally signed by RANJITHKUMAR
Date: 2026.06.22 17:58:06 +0530

நீதித்துறை நடுவர்,
சத்தியமங்கலம்.

**குறிப்பு.**

1) வழக்கு விசாரணையின்போது எதிரி ஜாமினில் இருந்தார்.

2)எந்த ஒரு சாட்சியையும் விசாரணைக்காக மூன்று வாய்தாக்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3) வழக்கு முடிவு இரு தரப்பினருக்கும் தெரிவிக்கப்பட்டது.

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT AT SATHYAMANGALAM
## CASE SUMMARY

### CC.NO.46/2018

| Period of Remand of accused | The date of filling of the complaint/final Report in the court | The date of committal of the case to the court of sessions | The date of questioning of the accused U/s.228, 240, 246 and 251 of the code of criminal procedure the case maybe | Filling of all miscellaneous petition and the result including the result on challange before superior court except routine petitions like petitions U/s. 317 of the code | Date of examination in chief and cross examination of the witness | | | Date of examination of the accused U/s. 313 of the code | Date of upsconder of accused and his appearance/production as the case maybe | Grand of stay by superior court and the results thereof |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Nil | 24.07.2018 | Nil | 20.09.2018 | MP.No.10/2025 Petition allowed | Pws/ Dws | Chief | Cross | 22.06.2026 | - | - |
| | | | | | Pw1 | 12.07.2023 | - | | | |
| | | | | | Pw2 | 12.07.2023 | 12.07.2023 | | | |
| | | | | | Pw3 | 12.07.2023 | 12.07.2023 | | | |
| | | | | | Pw4 | 30.05.2024 | 30.05.2024 | | | |
| | | | | | Pw5 | 30.05.2024 | 30.05.2024 | | | |
| | | | | | Pw6 | 30.05.2024 | 30.05.2024 | | | |
| | | | | | Pw7 | 30.05.2024 | 30.05.2024 | | | |
| | | | | | Pw8 | 14.10.2024 | 14.10.2024 | | | |
| | | | | | Pw9 | 14.10.2024 | - | | | |
| | | | | | Pw10 | 14.10.2024 | 14.10.2024 | | | |
| | | | | | Pw11 | 16.10.2024 | - | | | |
| | | | | | Pw12 | 27.01.2025 | 27.01.2025 | | | |

RANJITHKUMAR Digitally signed by RANJITHKUMAR Date: 2026.06.22 17:58:13 +0530

Judicial Magistrate,
Sathyamangalam